TNTT070002152023

Presented on : 05-01-2023
Registered on : 05-01-2023
Decided on : 23-06-2026
Duration : 3 years, 5 months, 18 days

<table>
<tr><td colspan="2">நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2<br>முன்னிலை – திருமதி.M.மணிமேகலா, M.A., M.L.,<br>நீதித்துறை நடுவர் எண்.2 கோவில்பட்டி<br>2026–ம் ஆண்டு ஜுன் 23–ம் நாள் செவ்வாய்கிழமை<br><u>சுருக்கு விசாரணை வழக்கு எண். 4/2023</u></td></tr>
<tr><td>குற்றமுறையீட்டாளர்</td><td>தமிழ்நாடு மாநில அரசு சார்பில்<br>காவல் உதவி ஆய்வாளர்<br>கயத்தார் காவல் நிலையம்<br>குற்ற எண். 424/2022</td></tr>
<tr><td>அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர்</td><td>திரு. காளிதாஸ்</td></tr>
<tr><td>எதிரிகள்</td><td>1. கண்ணுசாமி, (வயது 74/26),<br>த/பெ. சுப்பையா,<br>6/1065, தெற்கு தெரு,<br>மஞ்சநம்பிகிணறு,<br>செட்டிகுறிச்சி,<br>கயத்தார் தாலுகா,<br>தூத்துக்குடி மாவட்டம்.<br><br>2. கனகமணி, (வயது 39/26),<br>க/பெ. இளையபெருமாள்,<br>1/80, பார்வதியம்மன் கோவில் தெரு,<br>இடைசெவல்,<br>கோவில்பட்டி தாலுகா,<br>தூத்துக்குடி மாவட்டம்.</td></tr>
</table>

| | |
|---|---|
| எதிரி தரப்பில் வழக்கறிஞர் | திரு. விஜி |

இவ்வழக்கானது 09.01.2023 தேதியன்று இந்நீதிமன்றத்தால் சுருக்கு விசாரணை வழக்கு எண். 04/23 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. விஜி அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலணையில் இருந்து வந்து இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. கயத்தார் காவல் நிலைய உதவி ஆய்வாளர் 1 மற்றும் 2 எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 323, 341, 506(i)–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கு.வி.மு.ச பிரிவு 173(2)ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதியறிக்கையை பரிசீலனை செய்து 09.01.2023 தேதியன்று இந்நீதிமன்றத்தால் சுருக்கு விசாரணை வழக்கு எண். 4/23 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 1 மற்றும் 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 341, 506(i)–ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகள் ஆஜராவதற்காக 08.02.2023 ம் தேதி வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

3. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன்கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டு, ஆவணங்களை படித்து பார்க்க போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் 1 மற்றும் 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 341, 506(i)–ன் கீழும்

18.04.2026 அன்று குற்றச்சாட்டுகள் விளக்கி வினவிய போது, எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்து வழக்கினை நடத்த விரும்புவதாக கூறினார்கள்.

4. எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபனம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் வரை விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.6 சான்றாவணங்கள் வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் </u>–

இவ்வழக்கில் கடந்த 20.11.2022 ம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு சாட்சி 1 செல்லம்மாள் வீட்டிலிருந்து தனது தோட்டத்திற்கு செல்லும் போது தோட்டத்தின் அருகே வைத்து 1 வது எதிரியும் 2 வது எதிரியும் வழிமறித்து சாட்சி 1 செல்லம்மாளைப் பார்த்து இங்கு வீடு கட்டக்கூடாது என்று எப்படி நீ சொல்லலாம் தேவிடியா என்று அசிங்கமாக பேசியுள்ளார்கள் என்றும், அதற்கு சாட்சி 1 செல்லம்மாள் எதிரிகளைப் பார்த்து எதுக்கு இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு 1 வது எதிரி அருகில் கிடந்த கம்பை எடுத்து ஒழுங்கா இரு உன்னை கொன்றுவிடுவேன் என்று சொல்லி சாட்சி 1 செல்லமாளின் முதுகில் கம்பால் அடித்தும் எதிரி 2 சாட்சி 1 செல்லமாளின் முதுகில் கையால் குத்தியும் சாட்சி 1 செல்லமாளுக்கு முதுகில் வீக்க காயமும் ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்துள்ளார்கள்.

(1) 23.11.2022 ம் தேதி 14.00 மணிக்கு கயத்தார் காவல்நிலைய முதல்நிலை காவலர் திரு. நாகராஜ் நிலைய பொறுப்பில் இருந்தபோது மஞ்சநம்பிக்கிணறு தெற்கு தெருவைச் சேர்ந்த கண்ணுச்சாமி மனைவி செல்லம்மாள் என்பவர்

நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஐ பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மைப்படி கயத்தார் காவல் நிலைய குற்ற எண் 424/2022, எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 341 506(i)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஐ பதிவு செய்துள்ளார்.

(2) பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் சுரேஷ் 23.11.2022 ம் தேதி 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அய்யாத்துரை மற்றும் சுப்பிரமணி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஐ தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் செல்லம்மாள், பாலசுப்பிரமணியன், செல்வக்குமார், அய்யாத்துரை, சுப்பிரமணி, மற்றும் கயத்தார் காவல்நிலைய முதல்நிலை காவலர் திரு.நாகராஜ் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிசிக்சை அளித்த மருத்துவர் ரேச்சல் ரீனா என்பவரை விசாரித்து காயச்சான்று காயச்சான்று அ.சா.ஆ.6 ஐ பெற்றார். பின்னர் புலன் விசாரணை அதிகாரி வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 341, 506(i)–ன் படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் விளக்கி வினவிய போது எதிரிகள் தங்களுக்கு எதிரான சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை.

7. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கில் ஆஜரான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் புகார்தாரர் அ.சா.1 செல்லம்மாள் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்திருந்த போதிலும், நீதிமன்ற ஆவணங்கள் அடிப்படையில் எதிரிகள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கலாம் என்று வாதிட்டார்.

8. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட புகார்தாரர் அ.சா.1 செல்லம்மாள் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார் எனவும், அரசு தரப்பில் அரசு தரப்பு வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. <u>தீர்வுக்குரிய பிரச்சினை</u>

இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில் 1 மற்றும் 2 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(b), 323, 341, 506(i)––ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? அக்குற்றச்சாட்டுக்களின் பேரில் எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்களா? என்பதேயாகும்.

10. இவ்வழக்கின் சம்பவமானது 20.11.2022ம் தேதி 12.00 மணிக்கு நடைபெற்றுள்ளது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆனது 23.11.2022ம் தேதி 14.00 மணியளவில் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆனது பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசுத்தரப்பில் மேற்படி காலதாமதம் குறித்து எவ்வித முன்விளக்கமும் அளிக்கப்படவில்லை.

11. புகார்தாரர் அ.சா.1 செல்லம்மாள் தனது சாட்சியத்தில் சம்பவ காலத்தில் யார் தன்னை அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்று அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ள நிலையில் மேற்படி சாட்சியிடமிருந்து அரசு தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 154(1)ன் படி கேள்விகள் கேட்கப்பட்டு, அரசு தரப்பிற்கு சாதகமாக எந்தவிதமான பதில்களும் பெறமுடியவில்லை.

12. புகார்தாரர் அ.சா.1 செல்லம்மாள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் பிற சாட்சிகளை விசாரிப்பதில் அரசு தரப்பு வழக்கிற்கு யாதொரு பலனும் இல்லை என பிற பட்டியல் சாட்சிகளை அரசு தரப்பில் விட்டொழிக்கப்பட்டு, அ.சா.2 திரு. சுரேஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்கப்பட்டார்.

13. அ.சா.2 திரு. சுரேஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கினை விசாரணை அதிகாரி விசாரணை செய்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் புகார்தாரர் அசா.1 செல்லம்மாள் தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் குறித்து தனது புகார்வாக்குமூலத்திற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில், உறுதியூட்டம் இல்லாத காவல் அதிகாரியின் சாட்சியத்தையும், ஆவணங்களையும் வைத்து மட்டுமே எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டு விட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. எனவே எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

இறுதியாக, அரசு தரப்பு வழக்கினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காத நிலையினை எதிரிகளுக்கு அளித்து 1 மற்றும் 2 எதிரிகள் இதச பிரிவுகள் 294(b), 323, 341, 506(i)–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே சொத்து குறித்த உத்தரவு எதுவும் இல்லை.

எதிரிகளால் 28.12.2022ம் தேதி எழுதி கொடுக்கப்பட்ட பிணைமுறிவு பத்திரங்கள் ரத்து செய்யப்படுகின்றன.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தப்பட்டு 2026 ஆண்டு ஜுன் மாதம் 22–ம் தேதி அன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்)...M. மணி மேகலா/23.06.2026

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

கோவில்பட்டி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| அ.சா | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர்கள் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரம் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|---|
| அ.சா.1 | செல்லம்மாள் | புகார்தாரர் | 18.06.2026 | 18.06.2026 |
| அ.சா.2 | சுரேஷ் | சிறப்பு உதவி ஆய்வாளர் | 18.06.2026 | 18.06.2026 |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| அ.சா.ஆ | சான்றுகளின் விவரம் | தேதி |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கைரேகை | 18.06.2026 |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் | 18.06.2026 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | 18.06.2026 |
| அ.சா.ஆ.4 | பார்வைமகஜர் | 18.06.2026 |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | 18.06.2026 |
| அ.சா.ஆ.6 | காயச்சான்று | 18.06.2026 |

<u>அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்</u> – இல்லை
<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u> – இல்லை
<u>நீதிமன்ற சாட்சிகள், சான்றாவணங்கள்</u> – இல்லை

(ஒப்பம்)...M. மணி மேகலா/23.06.2026
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி.

குறிப்பு –

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2. இவ்வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. இவ்வழக்கின் தீர்ப்பு முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

Dictated on : 22.06.2026
Transcribed on : 22.062026
checked on : 23.06.2026
Signed on : 23.06.2026

Visit **ecourts.gov.in** for updates or download mobile app "**eCourts Services**" from Android or iOS

**CASE-SUMMARY**

**C.N.R.No. TNTT07-000215-2023**

<table>
<tr><th>Sl. No</th><th colspan="2">Details</th><th colspan="2">Particulars</th></tr>
<tr><td>1</td><td colspan="2">Period of Remand of the Accused</td><td colspan="2">---</td></tr>
<tr><td>2</td><td colspan="2">Date of Filing of the Final Report</td><td colspan="2">09.01.2023</td></tr>
<tr><td>3</td><td colspan="2">Date of Questioning of the Accused under section 281 Cr.P.C</td><td colspan="2">18.04.2026</td></tr>
<tr><td>4</td><td colspan="2">Filing of All Miscellaneous Petitions (Except 317 Cr.P.C)</td><td colspan="2">311 Cr.P.C Petition Filed on 18.06.2026</td></tr>
<tr><td rowspan="3">5</td><td colspan="2">Date of Examination in chief and cross examination of witnesses</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td rowspan="2"></td><td>P.W.1</td><td>18.06.2026</td><td>18.06.2026</td></tr>
<tr><td>P.W.2</td><td>18.06.2026</td><td>18.06.2026</td></tr>
<tr><td>6</td><td colspan="2">Date of Questioning u/s.313 Cr.P.C</td><td colspan="2">19.06.2026</td></tr>
<tr><td>7</td><td colspan="2">Details of abscondence of an accused</td><td colspan="2">-</td></tr>
<tr><td>8</td><td colspan="2">Grant of Stay by Superior Courts</td><td colspan="2">-</td></tr>
</table>

(Sd)....M..Manimegala/23.06.2026
Judicial Magistrate No.II,
Kovilpatti